# நம் வாழ்வில் புதைந்துள்ள மாபெரும் புதிர் !

PV.JESUDAS

தேவனுடைய பிள்ளைகளாகிய உங்கள் ஒவ்வொருவரையும், நம் மீட்பராகிய நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்களன்டையில் நடத்தி பெலவீனமான ஆடுகளை பெலப்படுத்தி, சுகவீனமான ஆடுகளுக்கு சுகம் கொடுத்து தம்முடைய தோளிலே தாங்கி, ஏந்தி, வழி நடத்துமாறு நான் என் ஜெபத்திலே வேண்டிக்கொள்கிறேன்.

**ஒ**ரு தகப்பன் தனக்கிருந்த ஒரே மகளை மிகவும் செல்லமாக வளர்த்தார். அவள் தாயில்லாத பெண்ணாக இருந்தாள். அந்த மகளுக்கு படிப்பு முடித்து திருமணம் செய்கின்ற நேரத்திலே, அந்த பெண் தன் தகப்பனிடத்தில் வந்து: அப்பா நான் ஒரு வாலிபனை விரும்புகிறேன், அவரை திருமணம் செய்வதாக நான் முடிவு செய்துவிட்டேன், உங்களுடைய ஆசீர் எனக்கு தர வேண்டும் என்று கேட்டாள். அப்பொழுது அந்த தகப்பன்: மகளே! அந்த வாலிபன் யாரென்று எனக்கு சொன்னால் நான் அவனை பற்றி விசாரித்து உன்னிடத்திலே சொல்லுகிறேன் என்று சொன்னார். அந்த பெண்ணும் அந்த வாலிபன் எப்படிப்பட்டவன் என்று தன் தந்தையிடம் சொல்லி முடித்தாள்.

தகப்பனாரும் அநேக நாட்கள் அந்த வாலிபனை பற்றி பல இடங்களில் தீர விசாரித்த பிறகு, அந்த வாலிபன் ஒரு நல்ல மனிதன் அல்ல என்பதை கண்டார். அநேக பெண்களை இவ்விதமாக அவன் ஏமாற்றி திருமணம் செய்து சீரழிய வைத்திருக்கிறான் என்பதையும் அவர் அறிந்தார்.

பின்பு அவர் தன்னுடைய மகளிடத்தில் வந்து: மகளே! அந்த வாலிபன் உனக்கு வேண்டாம், அவன் எப்படிப்பட்டவன் என்பதை நான் தீர விசாரித்த பிறகே இப்படி சொல்லுகிறேன். உனக்கொரு நல்ல வாலிபனாக நான் தேர்ந்தெடுக்கிறேன் என்று சொன்னார். அந்த மகளுக்கு பிரியமில்லை அவள் அந்த வாலிபனோடு பழகியிருந்தாள்.



எப்படியாவது அந்த வாலிபனைதான் திருமணம் செய்யவேண்டும் என்றிருந்தாள். அவன் ஆடம்பரத்தையும், அவன் நிறத்தையும், அவன் அழகையும் பார்த்தாள், ஆனால் அவன் உள்ளத்தை பார்க்க தவறிவிட்டாள். இப்படிதான் சில பெண்கள் இக்காலத்தில் சிக்கிக்கொள்கிறார்கள். ஆகவே தகப்பனார் அதை மறுத்து எவ்வளவோ அந்த பெண்ணிடத்தில் பேசி பார்த்தார், அந்த பெண் தன் மனதை மாற்றி கொள்ள விரும்பவில்லை.

முடிவாக ஒரு நாள் இரவு அந்த பெண் தன்னுடைய நகைகளையும், பணங்களையும், எல்லாவற்றையும் எடுத்துகொண்டு அந்த வாலிபனோடே ஓடிவிட்டாள். தூரமான இடத்திற்கு சென்று அங்கே பெரிய ஓட்டலிலே தங்கினார்கள். சந்தோஷமாக அங்கே குடும்ப வாழ்க்கை நடத்தினார்கள். பத்தாவது நாளிலே மதியம் சாப்பாட்டிற்கு பிறகு உறங்கிகொண்டிருந்த அந்த பெண் திடிரென்று விழித்து பார்த்து திடுக்கிட்டாள்! அவள் காதலனை காணவில்லை, அவன் எங்கே போனான் என்று தெரியவில்லை, நெடுநேரமாகியும் அவன் வரவில்லை. பயந்துபோய் அவள் பெட்டியை தேடினாள் அதுவும் அங்கில்லை! ஒரு நாள் முழுவதும் காத்திருந்தாள் அவன் வரவேயில்லை. அந்த பையன் அவளை ஏமாற்றிவிட்டான் என்று அறிந்துகொண்டு மிகவும் கதறி அழுதாள். இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏராளமாக இக்காலத் திலே நடந்துகொண்டிருக்கிறது .

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! பாவம் இந்த உலகத்தை சீரழித்துகொண்டிருக்கிறது. அதற்கு ஒரு எல்லையில்லாமல் போய்விட்டது. ஆண்டவர் நமக்கு கொடுக்கவேண்டிய எல்லா ஆசீர்வாதங்களோடு நம்மை படைத்தார். அவருக்கு கீழ்ப்படியாமல் போனதாலே நாம் இன்று பாவத்திற்கு அடிமைகளாகிவிட்டோம். இந்த உலகத்தின் சக்திகளுக்கும் மிருகங்களுக்கும் பறவை களுக்கும் மனிதர்களுக்கும் இந்த உலகத்தின் தத்துவங்களுக்கும் சத்துவங்களுக்கும் அடிமையாய் போனோம். நம்மை பரதேசி யாக்கின இந்த பாவத்தை பற்றி ஒருவர் சொன்னார்: இந்த அண்டசராசரங்களிலே இந்த பாவம் என்பது ஒரு கொள்ளைக்காரன் என்று சொன்னார். இந்த பாவம் உலகத்தில் வந்தபிறகு, உலகத்தினுடைய காரியம் யாவும் விடுவிக்கமுடியாத புதிராக மாறிவிட்டது. நாம் எங்கேயிருந்து வந்தோம்? எங்கே போகிறோம்? நாம் இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறோம்? என்பது நமக்கு தெரியவில்லை. இதை பற்றி யோசித்து பார்த்தும் அதற்கு விடை நமக்கு தெரியவில்லை.

உதாரணமாக முதலாவது மகா யுத்தம் நடந்தது, அந்த யுத்தத்தில்

ஒரு கோடிபேர் இறந்துபோனார்கள், ஆறு கோடிபேர் காயமடைந்தார்கள். உலகத்தில் அநேக ராஜியங்கள் வனாந்திரமாக மாறியது, உடனே ஐக்கிய நாட்டு சங்கம் கூடி, இனி யுத்தம் வரக்கூடாது என்று சட்டம் பிறப்பித்தது.

சில வருடம் கழிந்து இரண்டாவது மகா யுத்தம் வந்தது, அந்த யுத்தத்தில் ஆறு கோடிபேர் இறந்தார்கள், பதினைந்தாயிரம் பேர் காயமடைந்தார்கள். முதல் யுத்தத்தில் செலவழிந்ததைவிட இருபது மடங்கு அதிகமாக செலவழிந்தது. யுத்தத்தில் எல்லா பக்கத்திலும் சாவுதான் அதிகமாயிருந்தது! யுத்தத்தினால் கோடிக் கணக்கான மக்கள் அழிவதை தவிர வேறு எப்படி அது முடிகிறது?



**1914–1918 முதல் உலக மகா யுத்தம்**



**1939–1945 இரண்டாவது உலக மகா யுத்தம்**





**யுத்தத்தில் மரித்துபோனவர்கள் கல்லறையில்...**

ஒரு நாடு இன்னொரு நாட்டை பிடித்துவிட்டது என்று சந்தோஷப்பட்டாலும் அந்த வெற்றியடைந்த நாட்டு மக்களிலும் தோல்வியடைந்த நாட்டு மக்களிலும் எத்தனை கோடி உயிர்கள் பலியாகிறது! முதலாவது யுத்தம் கடந்தது, இரண்டாவது யுத்தமும் கடந்தது, மக்கள் அதனுடைய விளைவுகளை அறிந்தார்கள். அது கொடுமை, அது மிக பயங்கரம் என்று கண்டு இனிமேல் யுத்தமே இருக்கக்கூடாது என்று நினைத்தோம், ஆனாலும் இன்று மக்கள் மூன்றாவது உலக மகா யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

மது குடிப்பது தீமை என்று நமக்கு நன்றாக தெரியும், ஆனாலும் அதை நாம் திரும்ப குடித்து நம் உடல் நலத்தை கெடுத்துபோடுகிறோம் ஏன்? இது ஒரு புரியாத புதிர்! ஏன் என்று நமக்கு விளங்குவதில்லை. தீமையான காரியங்களை செய்யக் கூடாது என்று தெரிந்தும் மனிதன் செய்கிறான். இது புரியாத புதிராகவே இருக்கிறது. இந்த புதிருக்கு முக்கிய காரணம் பாவமே! இந்த பாவம் என்கிற அந்த புதிரை பற்றி எந்த மார்க்கத்திலும் விளக்கம் அதிகமாக இல்லை. இந்த பாவத்தை பற்றி பூரண விளக்கம் கொடுக்கக்கூடிய ஒரே புத்தகம் கிறிஸ்தவ மார்க்கத்திலே இருக்கிற பரிசுத்த வேதாகமத்திலே எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு நாள் இரண்டு ஆபீஸர்கள் சென்னையிலிருந்து மகாபல்லிபுரத்திற்கு ஞாயிறு கிழமை போகலாம் என்று முடிவு செய்தார்கள்.

ஞாயிறு காலை அந்த ஆபீஸர் தனது காரை எடுத்துக்கொண்டு தனது நண்பர் வீட்டுக்கு போய் பார்த்தபோது, அங்கு அந்த நண்பர் கையில் ஒட்டடை குச்சியை வைத்துகொண்டு இருந்தார். அப்பொழுது இந்த ஆபீஸர்: என்னய்யா? வரசொல்லிவிட்டு கையில் ஒட்டடை குச்சியோடு காட்சியளிக்கிறாயே? என்று கேட்டார்.

அதற்கு அந்த நண்பர்: என்ன செய்வது? நாம் சுலபமாக பேசிவிட்டோம், நீயும் சுலமாக வந்துவிட்டாய், ஆனால் எனது வீட்டம்மா: வெளியேவா போகிறீர்கள்? சரி போகும்முன்னே வீட்டை ஒட்டடை அடித்துவிட்டு செல்லுங்கள் என்று உத்தரவு போட்டுவிட்டார் என்று சொன்னார்.

பின்பு இருவரும் புறப்பட்டு போகையில், அந்த நண்பர் அதிக வருத்தப்பட்டு ஒவ்வொரு ஞாயிறு கிழமையும் இந்த ஒட்டடை அடிக்கிற வேலை மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார். அதற்கு அந்த நண்பர் ஒட்டடை அடிக்கா மலிருக்க ஒரு வழி சொல்லுகிறேன், அடுத்த முறை ஒட்டடையை உண்டாக்குகிற அந்த சிலந்தி பூச்சியை கொன்றுவிடுங்கள் என்றார்.

இந்த உலகத்தில் பல பிரச்சனைகள் இருக்கிறது. ஒரு பிரச்சனைகளிலிருந்து மீண்டாலும், மறுபிரச்சனைகள் வந்துக் கொண்டேதான் இருக்கிறது. என்ன செய்வது என்று திண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஏதாவது ஒரு வழி இருக்கிறதா?

இந்த பிரச்சனைகளுக்கு காரணம் பாவமே என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். இந்த பாவம் என்ற சிலந்தி பூச்சிகள், இந்த உலகத்தில் ஏராளமான பிரச்சனைகளை கிளப்பிகொண்டுதான் இருக்கிறது. இந்த பிரச்சனைகளை நாமும் ஓரளவிற்கு தீர்த்தாலும், அவைகள் மறுபடியும் வெவ்வேறு ரூபம் கொண்டு வந்து நம்மை அலைக்கழிக்கிறது. அதனால் இந்த பிரச்சனைகளுக்கு காரணமான அந்த சிலந்தி பூச்சியான பாவத்தை நாம் முதலாவது அழிக்கவேண்டும். அப்படி அந்த பாவத்தை நாம் அழித்தால் நமக்கு வேறு பிரச்சனைகள் வர வாய்ப்பில்லை.

அண்டசராசரங்களின் தேவனாகிய கர்த்தர் இந்த உலகத் திற்கு வந்தபோது, அவரது வல்லமைகளோடும், தூதர் படை களோடும் இந்த உலகத்தை காப்பாற்ற வரவில்லை. அவர் வரும்போது பெரிய ஐசுவரியனாகவும் வரவில்லை. இந்த உலகத்தில் இருக்கும் பிரச்சனைகளுக்கு காரணம் பாவம் என்று அவர் நன்றாய் அறிவார். பாவத்தை அழிக்கும்படி



ஒரு ஏழை யாகவும், இட்சகராகவும் இந்த உலகத்திற்கு வந்தார். தன்னுடைய மரணத்தினாலே சாத்தானை ஜெயித்து, பாவத்தை வேரோடே பிடிங்கிபோட மறுபடியும் மிக சீக்கிரத்தில் வரப் போகிறார். நாம் இழந்துபோன அந்த நித்திய ஜீவனை, மீண்டும் அடைய இந்த பாவத்தை அடியோடு அழிக்கவருகிறார்.

பாவம் என்பது என்ன? பாவத்தின் காரணர் யார்? அதை உண்டாக்கினது யார்? அதை உற்சாகமாக நடத்திக் கொண்டிருக்கிறது யார்? என்று சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

**பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம். – 1 யோவான் 3:4.**

**பாவம் என்பது என்ன?**

அது நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம். நியாயப் பிரமாணம் என்பது என்ன? அது கடவுள் கொடுத்த பத்து கட்டளைகள். அந்த பத்து கட்டளைகளை மீறுவதே பாவம். அந்த பத்து கட்டளைகளை இறைவன் வானத்திலிருந்து இறங்கிவந்து தன் சொந்த விரலினாலே அதை எழுதிக்கொடுத்தார்.




ஆகவே அது அவ்வளவு முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது. அந்த பத்துகட்டளைகளை கடவுளுடைய பிள்ளைகள் அவருடைய பெலத்தினாலே கைகொள்ளவேண்டும். அதை மீறினால் அது பாவச்செயலாக இருக்கும். அப்படி பாவம் வரும்போது நமக்கு அதனாலே அதிக பிரச்சனைகள் வரும்

என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும். ஆகவே கற்பனைகளை மீறுவதே பாவம் என்று வேதம் நமக்கு திட்டவட்டமாக சொல்லுகிறது.

### பாவத்தின் காரணர் யார்?

யாரோ ஒருவன் இந்த கற்பனைகளை மீறியிருக்கவேண்டும். அந்த மீறுதலினால் பாவம் உண்டாயிருக்கவேண்டும். அதனால் மக்கள் யாவரும் அதற்கு காரணராகிவிட்டார்கள்.

1945–ம் ஆண்டில் ஜப்பானில் அணுகுண்டை போட்டார்கள்.









அந்த பட்டணத்தில் பத்து லட்சத்திற்கு மேலானவர்கள் சாம்பலாகி போனார்கள். மற்ற முப்பது லட்சம்பேர் நோயினால் அவதிப் பட்டார்கள். அவ்வண்ணமாகவே இந்த உலகத்தின் மக்கள் பாவம் என்ற வல்லமையினாலே சிக்கி திணறிக் கொண்டிருக்கிறார்கள். பாவத்தினால் பலர் மரிக்கிறார்கள், பலர் வியாதிப்படுகிறார்கள்.

அப்படியானால் யாரோ ஒருவன் இந்த பாவத்தை இந்த உலகத்திற்கு கொண்டு வந்திருக்கவேண்டும். காரணமில்லாமல் இந்த உலகத்தில் பாவம் நுழைந்திருக்கமுடியாது. இந்த பாவத்திற்கு ஒரு காரணர் உண்டு, அது யார் என்றும் வேதம் சொல்லுகிறது.

**பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும் படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். – 1 யோவான் 3 : 8 .**

அண்டசராசரங்களின் இரகசியங்களெல்லாம் இந்த வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பிசாசு என்பவன் முதலாவது பாவம் செய்தான். பிசாசு என்றால் சத்துரு என்று அர்த்தம். சத்துரு என்றால் கொடியவன் என்று அர்த்தம். சத்துரு என்பவன் யார்?

**உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். – வெளி 12 : 9.**

அகவே பிசாசு என்பதன் பொருள் சாத்தான் என்று சொல்லப் படுகிறது. சாத்தான் என்றால் சத்துரு என்ற பொருள்ப்படுகிறது. அப்படியானால் அவனுக்கு சாத்தான் என்றும் வலுசர்ப்பம் என்றும் பெயர் இருக்கிறது. ஆகவே அவன் ஒரு தேவதூதன். அந்த தேவதூதன் பூமியிலே தள்ளப்பட்டான். அப்படியானால் அவன் எங்கிருந்து தள்ளப்பட்டான்?

**அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன். – லூக்கா 10 : 18.**

அந்த சாத்தான் வானத்திலிருந்து விழந்தான் ஆகவே அவனது இருப்பிடம் வானத்திலிருந்தது என்று நாம் அறிந்துகொள்கிறோம். வானத்தில் எப்படி இருந்தான்?

**அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே!**
**– ஏசாயா 14 : 12.**

அவனை வேதம் விடிவெள்ளி என்று அழைக்கிறது. அதை ஆங்கிலத்தில் லூசிபர் என்று எழுதியிருக்கிறது. விடிவெள்ளி நட்சத்திரத்தை நாம் பார்க்கும்போது அது மற்ற நட்சத் திரங்களைவிட அதிகமாக பிரகாசிக்கும். வேதத்தில் தேவதூதர் களை நட்சத்திரங்கள் என்று அழைக்கிறது.

அந்த நட்சத்திரங் களிலே (தேவதூதர்களிலே) மிகவும் பிரகாசம் பெற்றது விடிவெள்ளி நட்சத்திரம் (சாத்தான்) மட்டுமே. அந்த சாத்தானின் இருப்பிடம் எது?

**மனுபுத்திரனே நீ தீரு ராஜாவைக்குறித்துப் புலம்பி அவனை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால். நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரைமோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன். –எசேக்கியேல் 28 : 12.**

சாத்தான் என்று சொல்லப்பட்ட அவனை ஒரு கேரூப் என்று எழுதியிருக்கிறது. கேரூப் என்றால் என்ன? தேவ தூதர்களுக்கு மத்தியிலே அநேக இனங்கள் இருக்கிறது. அதில் கேரூப் என்ற இனத்தில் ஆறு இறைக்கைகள் கொண்டு, அதில் இரண்டு இறக்கைகளினாலே முகத்தை மூடி, இரண்டு இறக்கைகளினாலே உடம்பை மூடி, இரண்டு இறக்கைகளினாலே பறந்து ஆண்டவருடைய சநிதானத்திலே நிற்பவன்.

அடுத்து அவன் அபிஷேகப்பண்ணப்பட்ட கேரூப் என்று சொல்லப்படுகிறது. தேவனுடைய சிங்காசனத்திற்கு இரு பக்கமும் ஒரு தேவ தூதர்கள் இருக்கிறார்கள். அந்த இரண்டு தேவதூதர்களும் காப்பாற்றுவதற்கு அபிஷேகம் பண்ணப் பட்டவர்கள். அங்கு தேவதூதர்களுக்கு 100 பேருக்கு அதிபதி, 1000 பேருக்கு அதிபதி என்று கோடிக்கணக்கான தேவதூதர்களுக்கு அதிபதிகள் இருக்கிறார்கள். அதிலே பெரிய பிரபுக்களும், சேனாதிபதிகளும் இருக்கிறார்கள். அந்த தேவதூதர்களுக்கெல்லாம் இரண்டு பெரும் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் தேவனுடைய சிங்காசனத்திற்கு வலது புறமாகவும் இடது புறமாகவும் இருக்கிறார்கள். அந்த இரண்டு பேரும் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள். வலது பக்கத்திலே இருந்த தேவதூதனின் பெயர் லூசிபர். இடது பக்கம் இருந்த தேவதூதரின் பெயர் காபிரியேல்.

லூசிபர் இறைவனுக்கு அடுத்தபடியாகவும் தேவதூதர் களுக்கு தலைவனாகவும் இருந்தான். அதனால் அவன் விடி வெள்ளியை போல பிரகாசமானவனாக இருந்தான். இறைவனின் அடுத்த ஸ்தானத்திலே அந்த லூசிப்பரை வைத்திருந்தார். ஆகவே அவனை பற்றி கர்த்தர் சொல்லுகிறார், நீ விசித்திரமாய் செய்யப் பட்ட முத்திரை மோதிரம். அந்த காலத்திலே ராஜாக்கள் முத்திரை மோதிரங்களை வைத்து முத்திரை இடுவார்கள். அந்த மோதிரங்கள் அழகாகவும்,விஷேசவிதமாகவும், விசித்திரமாகவும் சிற்பவேலைகள் நிறைந்த மோதிரமாகவும் இருக்கும்! அது விலை உயர்ந்த மோதிரமாக இருக்கும். அந்த மோதிரம் போல அவன் அழகாக இருந்தான்.



**நீ பூரண அழகுள்ளவன்.**

இந்த அண்டசராசரங்களிலேயே சாத்தானைப்போல அழகு யாருக்கும் இருந்ததில்லை! நமது சிந்தனையெல்லாம் பிசாசின் முகம் பயங்கரமானதாக இருக்கும் என்று நினைக்கிறோம்.

**நீ ஞானத்தால் நிறைந்தவன்**

பிரமாண்டமான ஞானம் அவனுக்கிருந்தது! அதை வைத்து பற்பல போதனைகளால் மக்களை திசைத்திருப்புகிறான். அவனது ஞானத்தை யாராலும் விவரிக்கமுடியாது.

**அந்த லூாசிபர் சங்கீதத்தில் வல்லவன்.**

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! நான் வியாதிப்பட்டு கிடந்தபோது ஆண்டவர் என்னை சந்தித்தார். அப்பொழுது எனக்கு 16 வயது. அன்று எனக்கு டைப்பாய்டு ஜுரம் வந்துவிட்டது. சாகபோகிற நிலமை வந்தது, ஒரு நாள் காலை நேரத்திலே தேவதூதர்கள் வானத்திலே எக்காள சத்தஹோடு வருகிற ஒரு காட்சியை கண்டேன்! அந்த எக்காள தொனியின் சத்தத்தை நான் கேட்டேன். அப்பொழுது அது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்று எனக்கு தெரியாது. அவர்கள் தேவதூதர்கள் என்றும் எனக்கு தெரியாது. பின்னாலே அதைப்பற்றி வேதத்தின் மூலமாக தெரிந்துக்கொண்டேன். இன்றைக்கும் அந்த தெய்வீக சத்தம் என்னுடைய செவிகளிலே ஒளித்துகொண்டிருக்கிறது. அந்த காட்சியை கண்டு 42 வருடம் ஆகிவிட்டது!

அவனுடைய சங்கீத ஞானத்தினாலே சினிமா பட பாடல்கள் மூலம் நம்மை கவர்ந்து பாதாளத்திலே தள்ளுகிறான். அந்த லூாசிப்பரை பற்றி,

**உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்து நீ பாவஞ் செய்தாய்; ஆகையால் நான் உன்னை தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேருபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப்போடுவேன். – எசேக்கியேல் 28 : 15.**

ஆண்டவர் இந்த அண்டசராசரங்களை படைப்பதற்கு முன்பாக தேவக்கூட்டத்தை சிருஷ்டித்தார். எப்படி அவர்களை சிருஷ்டித்தார் என்று வேதத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் இந்த தேவதூதர்களை பற்றி ஒரு சிறு விளக்கம் கூற விரும்புகிறேன். தேவதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் விசேஷமான ஒரு சலுகையை ஆண்டவர் வைத்திருக்கிறார். அது, தேவ தூதர்களும் நாமும் சிந்திக்கும்படியான அறிவை பெற்றிருக் கிறோம். அதனால் கடவுள் நமக்கு சுயாதீனம் சித்தத்தை கொடுத்திருக்கிறார்.அப்படியென்றால் நாம் என்ன நினைக்கிறோமோ அதை செய்யலாம்.

நமது இஷ்டம்போல எதைவேண்டுமானாலும் செய்யலாம் என்று நம்மையும் தேவதூதர்களையும் படைத்தார். அதனால் எது தவறு எது நல்லது என்று பார்த்து நடக்க நமக்கு சுதந்திரத்தை கொடுத்தார். அப்படியானால் இதை செய்தால் பாவம் என்று ஆண்டவர் சொன்னதையும் செய்யலாம். இது பரிசுத்தம் என்று ஆண்டவர் சொன்னதையும் செய்யலாம்.

ஆகவே இந்த சுதந்திரத்தை ஆண்டவர் நமக்கு கொடுக்கும்போது பாவத்தை யாராவது செய்யக்கூடும் என்று ஒரு நிலமை இருந்தது. இந்த தேவதூதர்கள் சிருஷ்டிக்கப் பட்டபோது இவர்கள் பாவம் செய்யக்கூடும் என்ற நிலமையில்தான் சிருஷ்டிக்கப்பட்டார்கள். ஏன் பாவம் இல்லாமல் கடவுள் சிருஷ்டித் திருக்க கூடாதா? என்ற கேள்வி நமக்கு வரக்கூடும். அப்படி நாம் பாவமில்லாமல் சிருஷ்டிக்கப்பட்டிருந்தால் நாம் சுதந்திரமாக இருந்திருக்கமுடியாது. நடமாடும் சிலைகளைபோலதான் இருந்திருபோம்.

மனிதர்களாகிய நாம், நமது இஷ்டபடி செய்தால்தான் நமக்கு சந்தோஷமுண்டு. மரத்தில் ஒரு பழம் பறித்து சாப்பிடவேண்டும் என்று ஆசைப்பட்டு, ஆண்டவரே! அதை பறித்து நான் சாப்பிடலாமா? என்று கேட்டால் நமக்கு என்ன சுதந்திரம் இருக்கிறது? மனிதன் சந்தோஷமாக இருக்கவேண்டும்! அவரை துதிக்கவேண்டும்! அவர் சொல்வதை கேட்க வேண்டுமென்றால், அவனுக்கு சுயாதீனசித்தம் வேண்டும். அவனாக வந்து ஆண்டவரை தொழுதுகொண்டால், கர்த்தருக்கு கனமும் மகிமையுண்டாகிறது!

ஒரு நல்ல மந்திரிக்கு மக்கள் தானாக வந்து, அவன் நல்லவன், அவன் சொல்படி செய்வோம் என்று சொன்னால்தான் அந்த மந்திரி கனமும் மகிமையும் அடைவான். அப்படியில்லாமல் அந்த மந்திரி பணம் கொடுத்து சில கூட்டத்தை நிறுத்தி மந்திரி வாழ்க அவர் நல்லவர் என்று சொல்ல சொன்னால் அவனுக்கு உண்மையான கனமும் மகிமையும் கிடைக்காது. பணத்திற்காக அவன் சொல்படி தலையாட்டுவார்கள், அது அவனுக்கே திருப்தியாகாது. ஆகவே இதற்காகதான் மனிதனுக்கு சுயாதீனம் சித்தம் வேண்டும். அவன் தானாக வந்து தன் முழு இருதயத்தோடு, தன் சித்தத்தின்படி தேவனை தொழுதுக்கொள்ள வேண்டும். அப்பொழுது தேவன் கனப்படுத்தப்படுவார். இந்த சுயாதீன சித்தம், கடவுள் மனிதனுக்கு கொடுத்த பெரிய ஈவு. அதை மக்களும் தேவதூதர்களும் சரியான முறையில் பழகி கொள்ளவேண்டுமே தவிர அதை எடுத்துபோடக்கூடாது.



ஆகவே இந்த உலகத்தில் பாவம் உண்டானபிறகு, இறைவன் பாவம் உண்டானதை அறிந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பலியானார் என்று வேதம் திட்டவட்டமாக சொல்லுகிறது. எத்தனை வருடங்கள் மக்கள் பாவத்தினால் படாதபாடுகள் பட்டு கொண்டிருக்கிறார்கள். சுயாதீனசித்தத்தில் கெட்டதை மனிதன் தெரிந்துகொண்டபடியினால் பாவத்தில் விழும்படியாகிவிட்டது.

ஆகவே இந்த சுயாதீனசித்ததை ஆண்டவர் அந்த சாத்தானுக்கு கொடுத்திருந்தார். மிக கனம்பொருந்திய அந்த சாத்தான் மற்ற உலகங்களுக்கு சுற்றி திரிந்தான். எல்லா உலகத்தாரும் அவனுக்கு வணக்கம் செலுத்தினார்கள். எல்லா தேவதூதர்களும் அவனை கனம்பண்ணினார்கள். எல்லோரும் தேவனை தொழுகிற நாள் வரும்போது, சாத்தானும் ஆண்டவருடைய சந்நிதானத்திலே வந்து நின்றான். எல்லோரும் தேவனுக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கும்போது, சாத்தானுக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று. ஏன் என்னையும் மற்றவர்கள் வணங்கக்கூடாது? ஆராதிக்கக்கூடாது? தொழுகை செய்யகூடாது? ஆண்டவரைபோலதானே எனக்கும் வல்லமைகள் இருக்கிறது. அப்படியிருக்க ஏன் என்னை அவர்கள் வணங்கக் கூடாது? என்ற கேள்விகள் அவனுக்குள் எழும்பியது. அவன் சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதை மறந்துவிட்டான். அவனுடைய ஞானத்தினாலும் அறிவினாலும், புத்தியினாலும், அழகினாலும், தன்னை மறந்தவனாக கடவுளுடைய தொழுகையை அவன் விரும்பினான் என்று வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

**நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்குமேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்,**

**– ஏசாயா 14:13.**

அவன் மனதிலே ஒரு பெரிய ஆசையிருந்தது. ஆண்டவருடைய சிங்காசனத்திற்கு நேராக தன்னுடைய சிங்காசனத்திலே உட்காரவேண்டும். இந்த அண்டசராசரத்தின் மக்கள் தன்னையும் ஆண்டவரைபோல தொழுதுகொள்ளவேண்டும் என்று அவன் விரும்பினான். அவன் உள்ளத்தில் ஒரு மேட்டி மையான எண்ணம் உண்டானது. தன்னுடைய தேவதூதர் களுக்குள்ளே போய் கிரியை செய்ய ஆரம்பித்தான். ஆண்டவரை பற்றி தவறான தகவல்களை பறப்பினான். அவருடைய சட்டம் சரியல்ல என்று சொன்னான். தேவதூதர்களும் அவனை நம்பினார்கள். அவனுடைய ஒவ்வொரு தேவதூதர்களுக்கும் ஒவ்வொரு பதவியை கொடுத்தான். அவன் இப்படி செய்தது எதனாலே என்றால்,

**நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.**

பொய்யினால் அவன் தேவதூதர்களை வளைத்துபோட்டான். பொய்யை கண்டுப்பிடித்ததே அவன்தான். சாத்தான் ஏவாளை சோதிக்கும்போது இந்த பழத்தை நீ சாப்பிட்டால் சாகமாட்டாய் என்று பொய் சொன்னான். ஏவாள் அதை ஏன் நம்பினாள் என்றால் அங்கு ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பொய் என்பது என்னவென்று தெரியாது, அதனால் நம்பினார்கள். மேலே தேவதூதர்களும் அதை நம்பினார்கள். அந்த பொய்யை நம்பி தேவதூதர்களும், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தார்கள். இன்றைக்கும் நாம் பொய் சொல்லாமல் இருக்கமுடிவதில்லை. இவற்றிலிருந்து மீண்டு வரவேண்டுமென்றால் கர்த்தருடைய பிள்ளைகள் விசேஷமாக பரிசுத்த வேதாகமத்தை கவனித்து வாசிக்கவேண்டும். அது சொல்லாத காரியம் யாவும் பொய் என்று அறிந்துக் கொள்ளவேண்டும். வேத வசனத்தை கைகொண்டால் உண்மையில் நிலைத்திருப்போம். அப்படி சாத்தான் பொய் பேசி அநேக தேவதூதர்களை தன் பக்கமாக இழுத்துக்கொண்டதை வேதம் நமக்கு சொல்லுகிறது

**வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.**
**–வெளி 12:3,7.**

அந்த பிசாசு ஆண்டவரோடு சண்டைபோட்டதினால் அவனையும் அவனை சேர்ந்த தேவதூதர்களையும் அவர் கீழே தள்ளினார். அந்த மூன்றில் ஒரு பங்கு தேவதூதர்கள் நமது உலகத்தில் சாத்தானோடு இருக்கிறார்கள். பற்பலவிதமாக தங்களை கடவுள் என்று காண்பித்துக்கொண்டு மக்கள் முன்பாக அதிசயங்களையும் ஆச்சரியமான காரியங்களையும் காண்பித்துக் கொண்டு ஏமாற்றி வருகிறான்.

அடுத்து சாத்தான் தன்னை மறைத்து கொள்ளுகிறான். அநேக மக்கள் சாத்தானும் இல்லை பிசாசும் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் இந்த உலகத்தில் தீமையான காரியங்கள் வரும்போது, அது கடவுளாலே வருகிறது என்று மக்களை சொல்லசெய்கிறான்.



இன்று உலகத்தில் புயல், பூகம்பம், வெள்ளம், கொள்ளை நோய்கள், கொலை, யாவும் கடவுளிடத்திலிருந்து வருவதல்ல. எல்லாம் அந்த விழுந்துபோன வல்லமையான தேவதூதர்கள் செய்கிறார்கள். மக்கள் தேவனை ஏற்றுக்கொள்ளாதவாறு அவர்களை அழித்துக்கொண்டிருக்கிறான்.

உலகத்தில் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு தகப்பன் இருக்கிறார். ஆனால் நமக்கு மேலான தகப்பன் கர்த்தர் ஒருவரே. யாவருக்கும் தகப்பனான அவர் நம்மை அழிப்பாரா? நமக்கு நோய்களை கொடுப்பாரா? நமக்கு துன்பங்களை கொடுக்கிற சாத்தான் நம்மை அழிக்காமல் விடமாட்டான். அவனுக்கு இறக்கமில்லை, அன்பு இல்லை. ஆனால் அன்பான தெய்வம் நமக்கு இருக்கிறார். நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் என்று தானே அழைக்கிறார். அந்த அன்பு கரங்களை பார்த்து ஏன் என்னை படைத்தாய்? ஏன் எனக்கு துன்பங்கள் கொடுக்கிறாய்? என்று கேட்டால் அவர் மனது எவ்வளவு கஷ்டபடும்? கடைசிக்காலத்தில் இதற்கு காரணம் யார்? என்று அறிந்து கொள்ளும் நேரம் வரும்போது இப்படி சொல்லுவார்கள்

**உன்னைக் காண்கிறவர்கள் உன்னை உற்றுப்பார்த்து, உன்னைக் குறித்துச் சிந்தித்து இவன்தானா பூமியைத் தத்தளிக்கவும், ராஜ்யங்களை அதிரவும் செய்து, – ஏசாயா 14:16.**

ஆண்டவர் அன்பு இல்லாதவராக இருந்திருந்தால் இந்த உலகத்திற்கு அவர் மனித அவதாரம் எடுத்து வந்திருக்க வேண்டிய அவசியமிருந்திருக்காது. மரணத்தினால் நம்மை இரட்சிக்கவேண்டிய அவசியமிருந்திருக்காது. நாமும் சாத்தானால் அழிந்து நாசமாகி ஒன்றுமில்லாமல் தூசி குப்பை போல ஆகியிருப்போம். அவருடைய அகால அன்பினாலே இன்று நாம் அவரை தெரிந்துகொண்டு அவரோடு நாளை நாம் வாழப் போகிறோம்.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! நம்மை ஒன்றுக்கும் உதவாத குப்பை என்று ஒதுக்கிவைக்காமல், காணாமல் போன இந்த ஆடுகளை கண்டுபிடிக்க அவர் இரத்தம் சிந்தி, படாதபாடு பட்டு நம்மை இரட்சித்து பரலோகத்துக்கு அழைத்து செல்லவே இவ்வளவாய் நம்மிடம் பிதாவும் இயேசுவும் அன்பு கூர்ந்தார்கள். அவருக்கு நாம் என்ன செய்தோம்? அவரோடுக்கூட வாழ நாம் அவருடைய பத்து கற்பனைகளை கடைபிடித்தாலே போதும். அவருக்கு பெரிய சந்தோஷமாயிருக்கும். ஏன் பரலோகமே சந்தோஷப்படும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக

—ஆமென்.